
## திராவிடத்தால் வாழ்கிறோம்

874

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

15

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# நரசிம்மன் மறைந்துவிட்டார், நரசிம்மபுரம் மறையாது!

ஆனைமலை ஆற்றங்கரையை அடுத்து, நரசிம்மனுக்குச் சொந்தமான தென்னந்தோப்பு ஒன்று இருந்தது. மக்கள் போக்குவரத்து நிறைந்த பகுதி. அங்குள்ள நெடுஞ்சாலையை யொட்டி திராவிடர் கழகக் கட்டடமும் அதில் பகுத்தறிவுப் படிப்பகமும் அமைக்கப் பட்டிருந்தன. அங்குள்ள நாயக்கர் தெருவில்தான் நரசிம்மனின் வீடு இருந்தது. அந்த வீட்டிற்குள் பெரியாரின் வேன் வந்து செல்வதற்காகவே நுழைவாயிலில் தனிவழி அமைத்திருந்தார். வீட்டின் புல்தரையில் பெரியாருடன் அமர்ந்து பேசிய வரலாறும் உண்டு.

இத்தகைய பேச்சுக்களின் ஊடாக, நரசிம்மனுக்கு மூன்று முக்கிய ஆலோசனைகளை வழங்கியிருந்தார் பெரியார்.

*1) தன்னிடம் இருக்கும் நிலத்திலோ அல்லது புதிதாக வாங்கியோ தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒன்றாக இருக்கும் வகையில் பகிர்ந்தளிக்க வேண்டும்.*

*2) தனது செல்வாக்கைப் பயன்படுத்தி பேரூராட்சியில் அரசு நிலத்தில் சகல தரப்பு மக்களையும் உள்ளடக்கிய 'சமத்துவக் குடியிருப்பு' ஒன்றை அமைக்க வேண்டும்.*

*3) தாழ்த்தப்பட்டவர் ஒருவரை பேரூராட்சித் தலைவர் ஆக்க முயற்சிக்க வேண்டும்.*

கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, மூன்று ஆலோசனைகளையும் நிறைவேற்றினார் நரசிம்மன்.

குறிப்பாக, ஆனைமலையில் பைமாசி நஞ்சப்ப கவுண்டர் என்பவருக்குச் சொந்தமான காலியிடம் ஒன்று இருந்தது. தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் சிலர் அங்கு குடிசை அமைத்து தங்கியிருந்தனர். எதிர்பாராத விதமாக நிகழ்ந்த தீ விபத்து ஒன்றில், குடிசைகள் தீக்கிரையாகி விட்டன. அதனால், அந்த இடத்தை விற்றுவிட முடிவெடுத்தார் பைமாசி நஞ்சப்ப கவுண்டர்.

**1959-இல் டெல்லியில் தந்தை பெரியாருடன் ஆனைமலை என்.நரசிம்மன், மணியம்மையார், புலவர் இமயவரம்பன், ஆசிரியர் கி.வீரமணி உள்ளிட்டோர்.**





பெரியாரின் அறிவுரையை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பாக இதை எடுத்துக்கொண்ட நரசிம்மன், அந்த இடத்தை தானே வாங்கி, தீ விபத்தில் வீட்டை இழந்தவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கும் பகிர்ந்தளித்து, தமிழ்நாட்டின் முதல் சமத்துவபுரத்தை மலரச் செய்தார்.

அடுத்து, காந்தியவாதியாக இருந்த காலத்திலேயே தன்னுடன் இணைந்து பணியாற்றிய ஏ.எம்.மாசாணி என்பவரை, பொதுத்தொகுதி யில் நிறுத்தி வெற்றி பெறச் செய்து, பேரூராட்சி மன்றத் தலைவராக்கினார். அந்த ஏ.எம்.மாசாணி மற்றும் மன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சியினரை இணைத்துப் போராடி, புதிய குடியிருப்புப் பகுதி ஒன்றை உருவாக்கினார். அரசை வைத்தே அனைத்து சமூக மக்களுக்கும் அந்தக் குடியிருப்பில் நிலத்தைப் பகிர்ந்தளித்தார். அவருடைய உழைப்பைப் போற்றும் விதமாக, மக்கள் அந்தப் பகுதிக்கு 'நரசிம்மன் நகர்' என்றே பெயர் சூட்டினர்.

இத்தகைய கொள்கை உறுதிமிக்க சாதி ஒழிப்புப் போராளி நரசிம்மன் அவர்கள் 1967-ஆம் ஆண்டிலேயே மறைந்துவிட்டார். "கழகத்தின் கண்போன்ற தோழர் நரசிம்மன் அவர்களை இயக்கத்தின் முக்கிய பொறுப்பில் எனக்குப் பின்னால் அமர வைக்க நினைத்திருந்தேன். ஆனால், அவர் என்னை முந்திக்கொண்டார்" என விடுதலையில் இரங்கல் செய்தி எழுதினார் பெரியார். ஆனால், அவர் எழுப்பிச் சென்ற நரசிம்மபுரம் இன்றும் சாதி, சமய வேறுபாடுகளற்ற சமத்துவபுரமாக அவரை நினைவூட்டிக்கொண்டே இருக்கிறது.

...பயணிப்போம்.

## பால சாகித்ய புரஸ்கார் விருது 'சிறார் அரசியல் நூல்'!





சாகித்ய அகாடமி வழங்கும் பால சாகித்ய புரஸ்கார், யுவ புரஸ்கார் விருதுகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் சிறந்து விளங்கிய கவிதை, கட்டுரைகள், சிறுகதைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ் மொழியில் 2025-ஆம் ஆண்டுக்கான பால சாகித்ய புரஸ்கார் விருது 'ஒற்றைச் சிறகு ஓவியா' என்ற சிறார் புதினத்தை எழுதிய விஷ்ணுபுரம் சரவணனுக்கு வழங்கப்படும் என சாகித்ய அகாடமி அறிவித்துள்ளது.

திருவாரூர் அருகே உள்ள விஷ்ணுபுரம் என்னும் ஊரில் பிறந்த சரவணன், கவிஞர், கதைசொல்லி, சிறார் எழுத்தாளர், பத்திரிகையாளர் எனப் பல தளங்களில் இயங்கி வருகிறார். முற்போக்குச் செயல்பாடுகள் மூலம் சிறார்களுக்கான எழுத்தாளர்களில் கவனம் பெற்றவர். 'ஊஞ்சல்', 'தேன்சிட்டு', 'கனவு ஆசிரியர்' என தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை வெளியிடும் இதழ்களில் திறம்படப் பங்காற்றி வருகிறார்.

விருதுக்குத் தேர்வாகியுள்ள 'ஒற்றைச் சிறகு ஓவியா' நூல், இயற்கை குறித்த அறிதல், சுற்றுச்சூழல் விழிப்பு உணர்வு என சிறார்களுக்கான அரசியல் அறிவை, புதிர்களைக் கண்டுபிடிப்பதுபோல பேசியது. சரவணன் எழுதிய 'கயிறு' என்கிற நூலும், பள்ளிச் சிறார்கள் கைகளில் கட்டும் வண்ண வண்ணக் கயிறுகளின் பின்னால் உள்ள சாதி அரசியலின் அபாயத்தை, சிறார்களுக்கும், பெற்றோர்களுக்கும் உணர்த்தியது. பள்ளிகளில் மாணவர்கள் கைகளில் சாதிக் கயிறுகளைக் கட்டுவதை அரசு தடை செய்த போது அதற்கு 'கயிறு' நூல் துணை செய்தது. தொடர்ந்து சமூகநீதி, சமத்துவ தளத்தில் சிறார் இலக்கியத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் விஷ்ணுபுரம் சரவணனுக்கு மேலும் சிறப்புகள் சேரட்டும்.

## ஃப்ளாஷ்பேக்





வி.செல்வராஜ்

### அண்ணன் நேரு தலைமையில், அன்பிலார் அரவணைப்பில்...

1987-ஆம் ஆண்டு ஜூன் 3 அன்று இலங்கைத் தமிழர் துயர் துடைப்புக் கூட்டம் மற்றும் நிதி வழங்கும் நிகழ்ச்சி சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற அந்த நிகழ்வில் அன்றைய ஒன்றியத் தலைவர், இன்றைய கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் தலைமையில் நானும் வந்து கலந்துகொண்டேன். அப்போது அண்ணன் அன்பிலார் அவர்கள் என்னை அழைத்து தலைவரிடம் அறிமுகம் செய்து வைத்தார்.

**- வி.செல்வராஜ், ஒன்றியச் செயலாளர், புள்ளம்பாடி வடக்கு, பெருவளப்பூர், திருச்சி மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

65

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

# உணர்வை மதிக்காத ஒன்றிய அரசு!

**'கீழடி அகழாய்வு தொடர்பான அறிக்கையை ஏற்பதற்கு இன்னும் கூடுதலான ஆதாரங்கள் வேண்டும்' என்று ஒன்றிய அமைச்சர் கூற, அதற்கு தமிழிசை உள்ளிட்ட தமிழ்நாடு பா.ஜ.க.வினர் தலையாட்டுகிறார்களே?**

தமிழ் மொழியின் பெருமையை உலக அரங்கில் மோடி பேசுகிறார் என்பார்கள் பா.ஜ.க.வினர். ஆனால், தமிழ்ப் பண்பாட்டின் உண்மையான பெருமையை, அதன் தொன்மையை அறிவியல்பூர்வமான ஆதாரங்களுடன் கொடுத்தாலும், ஏற்க மாட்டார்கள். தமிழ் மீதோ தமிழர் மீதோ உண்மையான மதிப்பு பா.ஜ.க.வினருக்குக் கிடையாது. சமஸ்கிருத மொழியையும் ஆரியப் பண்பாட்டையும் தமிழ்நாட்டின் மீது திணிப்பது ஒன்றுதான் அவர்களுடைய நோக்கம். ஒன்றிய அரசின் தொல்லியல்துறை 2013-இல் வைகை ஆற்றங்கரையில் 293 தளங்களைப் பட்டியலிட்டு ஆய்வு நடத்தி, கீழடியை முக்கிய இடமாக அடையாளம் கண்டது. 2014-இல் பா.ஜ.க. ஆட்சி வந்தது. 2015-இல் 3-வது கட்ட அகழாய்வுடன் கீழடியைக் கைவிட்டுவிட்டது. மீதமிருந்த 7 கட்டங்களை தமிழ்நாடு அரசின் தொல்லியல்துறைதான் மேற்கொண்டது.




தமிழர் நாகரிகம் பற்றிய அகழாய்வை பா.ஜ.க. அரசு ஏன் கைவிட்டது? அங்கே ஆரிய பண்பாட்டிற்கான அடையாளம் எதுவுமில்லை. கோயில்கள், கடவுள் சிலைகள் போன்றவை கிடைக்கவில்லை. இந்தியாவில் இதுவரை அறியப்பட்ட நாகரிகத்திற்கு முந்தைய நாகரிகமாக கீழடி இருந்தது. எழுத்தறிவு கொண்ட மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்தன. நல்ல உட்கட்டமைப்பு கொண்ட வீடுகள், தெருக்கள், உறைக் கிணறுகள் இருந்தன. ஆதிரன், குவியன் போன்ற தமிழ் எழுத்துகள் பானை ஓடுகளில் எழுதப் பட்டிருந்தன. இவை அனைத்தும் ராயல் டெஸ்டிங், ரசாயன பரிசோதனை, கரிமக்கரி பரிசோதனை முறைகளில் அறிவியல்பூர்வமாக நிருபிக்கப்பட்டே தொல்லியல் துறை இயக்குநர் அமர்நாத் ராமகிருஷ்ணா அவர்களால் ஒன்றிய அரசுக்கு ஆய்வறிக்கை அனுப்பப்பட்டது. இறுதி அறிக்கை 982 பக்க அளவில் விரிவாக இருந்தது.

ஆரியப் பண்பாட்டு வழிவந்த கடவுள் உருவங்கள் இல்லை. சாதிப் பாகுபாட்டிற்கான அறிகுறிகள் இல்லை. தமிழர்கள் எழுத்தறிவுடன் சமத்துவ சமுதாயமாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை சனாதன-வருணாசிரமக் கொள்கை பேசும் பா.ஜ.க.வால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அ.தி.மு.க. ஆட்சியில் பா.ஜ.க. அடிவருடிகளில் முதல் ஆளாக இருந்த அப்போதைய அமைச்சர் மாஃபா பாண்டியராஜன், "இது தமிழர் நாகரிகமில்லை. பாரத நாகரிகம்" என்று சொன்னபோது, தமிழ்நாடே காறித் துப்பியது.

தமிழர்களின் உணர்வை மதிக்காத பா.ஜ.க. அரசு ஆய்வறிக்கையை ஏற்காமல், திருப்பி அனுப்புகிறது. தொல்லியல் துறை இயக்குநர் அமர்நாத் ராமகிருஷ்ணாவைத் தொடர்ந்து இடமாறுதல் செய்கிறது. தமிழ்நாட்டுக்காரர்கள் எனச் சொல்லிக் கொள்ளும் நிர்மலா சீதாராமன், தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்ட சங்கிக் கூட்டம் தமிழையும் தமிழர்களையும் அவமதிக்கிறது. ஆனால், உண்மை வரலாற்றை சங்கிக் கூட்டத்தால் ஒருபோதும் மறைக்க முடியாது என்பதை தமிழ்நாடு முதலமைச்சரின் நடவடிக்கைகளும், தி.மு.க. மாணவர் அணியின் ஆர்ப்பாட்டமும் மெய்ப்பித்திருக்கின்றன.

...வினா தொடரும்.

## கருவூலம்

### நீதிக்கட்சித் தலைவர் தேர்வு!

1925-இல், சர் பிட்டி.தியாகராயரும், 1928-இல் பனகல் அரசரும் மறைந்ததை அடுத்து, நீதிக்கட்சிக்குப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க, 1929-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நெல்லூரில் 'நீதிக்கட்சி மாநாடு' கூடியது. தலைவர் பதவிக்கு சர் பி.டி.ராசனும் டாக்டர் சுப்பராயனும் பி. முனுசாமி நாயுடுவும் போட்டியிட்ட நிலையில், பி.முனுசாமி நாயுடு நீதிக்கட்சித் தலைவராகத் தேர்வானார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131